# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2025

## 51- சித்திரக்கலை

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

CS CamScanner

CS CamScanner

# க. பொ. த (உயர் தர)ப் பரீட்சை - 2025

## புள்ளி வழங்கும் திட்டம்

## I, II, III

## 51 - சித்திரக்கலை

**சித்திரக்கலை I**

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 07 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. அ பகுதியிலிருந்து எவையேனும் 2 வினாக்களையும் ஆ, இ பகுதியிலிருந்து 1 வினா வீதம் தெரிவு செய்து 4 வினாக்களிற்கு விடை தருக. பல்வேறு தேர்வு வினாக்களுக்கு 40 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 15 வீதம் 60 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை II**

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை III**

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு

ஆ. அலங்கார ஆக்கம்

இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் (300/3 = 100) மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

இறுதிப் புள்ளி கணித்தல் : $\frac{100+100+100}{300}$

=100

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே II,III பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.



CamScanner

CamScanner

பத்திரம் I

நோக்கம்:- 1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மாணங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.

2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.

3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

பத்திரம் II

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:- 1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.

2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.

3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதிப்பீட்டை செய்தல் வேண்டும்.



Past Papers Wiki

CamScanner

CamScanner



**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன் **(20 புள்ளிகள்)**
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். **(20 புள்ளிகள்)**
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கனமட்டம்) **(20 புள்ளிகள்)**
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். **(20 புள்ளிகள்)**
5. சித்திரத்தின் பூரணப்பாடு **(20 புள்ளிகள்)**

**IIம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்**

PAST PAPERS WIKI



CamScanner
CamScanner

பத்திரம் III

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்தியிருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை. (20 புள்ளிகள்)

2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை. (20 புள்ளிகள்)

3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம். (20 புள்ளிகள்)

4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன். (20 புள்ளிகள்)

5. பூரணப்பாடு (20 புள்ளிகள்)

( முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள் )

PAST PAPERS WIKI



CamScanner
CamScanner

## பத்திரம் III (ஆ)

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:-

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மாணிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மாணிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்குப் பொருத்தமாக நிர்மாணத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை. (20 புள்ளிகள்)
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்திக் கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்

## பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மாணிப்பு

நோக்கம்:-

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

( மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள் )



CamScanner
CamScanner

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ $\frac{4}{5}$

.....................................................................

.....................................................................

(ii) ..................................................................... ✓ △ $\frac{3}{5}$

.....................................................................

.....................................................................

(iii) ..................................................................... ✓ △ $\frac{3}{5}$

.....................................................................

.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

PAST PAPERS WIKI



CamScanner

CamScanner

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

●●●



CamScanner
CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

**Department of Examinations, Sri Lanka**

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

**51 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி I, பகுதி II ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |
| 1 ஆம் பரீட்சகர் | 2 ஆம் பரீட்சகர் |
| | |

## பகுதி I

● 1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

1. நவீன கலைப் பிரயோக அடிப்படையில் 'ஜென பவனம்' ஓவியத்தை வரைந்த ஓவியக் கலைஞர்,
   (1) ஜவன் பீரிஸ்.
   (2) ஹரி பீரிஸ்.
   (3) டபிள்யூ. ஜே. ஜீ. பீலிங்.
   (4) ரிச்சார்ட் கேப்ரியல்.
   (5) எல். டி. பி. மஞ்சு ஸ்ரீ. (....2....)

2. எகிப்திய ஓவிய நிர்மாணிப்பின் மிக முக்கிய எதிர்பார்ப்பானது
   (1) பாராவோ மன்னர்களின் வாழ்க்கைத் தகவல்களை பதிவு செய்வதாகும்.
   (2) ஆட்சியாளரின் வீர பாராக்கிரமத்தைக் காட்டுவதாகும்.
   (3) பாராவோ மன்னர்களின் சமய வழிபாடு மற்றும் நம்பிக்கையைக் காட்டுவதாகும்.
   (4) பாராவோ மன்னர்களின் யுத்த வெற்றியைக் காட்டுவதாகும்.
   (5) பாராவோ மன்னர்களின் வேட்டைக் காட்சியைக் காட்டுவதாகும் (....1....)

3. கம்பளை காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலையில் காணப்படும் விசேட பண்புகள்
   (1) கேத்திர கணித வடிவில் உடல் மற்றும் ஆன்மீகப் பண்புகளை சித்திரிப்பததாகும்.
   (2) இந்து கலைப் பண்புகளுக்கேற்ப இரு திறந்த கண்களைச் சித்திரிப்பதாகும்.
   (3) பரந்த தோள்கள் மற்றும் ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்துவதாகும்.
   (4) சந்திரீதியாக நீரலை வடிவில் காவியுடையை வெளிப்படுத்துவதாகும்.
   (5) தீச்சுடர்வடிவிலான உச்சிக்குடும்பியையும் (சிரஸ்பத்த) நீள்வட்ட ஒளிவட்டத்தையும் பொதுப்பண்பாக பயன்படுத்துவதாகும். (....2....)



CamScanner
CamScanner

4. அநுராதபுர காலத்திலிருந்து கண்டிக் காலம் வரையும் சந்திரவட்டக்கல்லில் இருந்த ஆனாலும் படிப்படியாக மாற்றத்திற்குள்ளானது.
   (1) பட்டிகளாகப் பிரித்து வேறுபடுத்தப்பட்ட விதமாகும்.
   (2) அரைத் தாமரைப் பூ வடிவம் பூரணத் தாமரை வடிவமாக மாறிய விதமாகும்.
   (3) கலை அம்சங்களை நிலைப்படுத்த ஒழுங்குபடுத்திய முறையாகும்.
   (4) நீச்சுவாலையின் வடிவம் மற்றும் அளவின் மாற்றமாகும்.
   (5) விலங்குருவங்களைக் காட்டும் திசையில் ஏற்பட்ட மாற்றமாகும். (...2.....)

5. இந்தியாவின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள பஞ்ச பாண்டவர் இரதக் கோயில்களில் இரட்டை மாடி ரதம்
   (1) அர்ச்சுணன் இரதமாகும்.
   (2) தருமர் இரதமாகும்.
   (3) திரௌபதி இரதமாகும்.
   (4) நகுல, சகாதேவ இரதமாகும்
   (5) பீமன் இரதமாகும் (...5.....)

● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, 1** தொடக்கம் **9** வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1


2


3


4


5


6


7


8


9

6. கட்டடக்கலை அம்சங்களாக அமைக்கப்பட்ட கலைப் படைப்புகள் எவை?
   (1) **2, 3, 4** (2) **3, 4, 7** (3) **4, 5, 6** (4) **4, 6, 7** (5) **5, 6, 7** (...2.....)

7. கற்பனை உருவை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புகள் எவை?
   (1) **2, 5** (2) **5, 6** (3) **6, 7** (4) **6, 9** (5) **7, 9** (...5.....)

8. வரலாற்று புராணக் கதையுடன் தொடர்பான நிர்மாணிப்புகள் எவை?
   (1) **1, 3** (2) **1, 5** (3) **1, 6** (4) **3, 6** (5) **6, 8** (...3.....)

9. செதுக்கல் நுட்பமுறையைக் கையாண்டு அமைக்கப்பட்ட நிர்மாணிப்புகள் எவை?
   (1) **1, 2, 4, 5** (2) **1, 2, 4, 7** (3) **1, 2, 6, 9** (4) **1, 3, 6, 9** (5) **4, 6, 8, 9** (...4.....)

10. வார்ப்பு சிற்பநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நிர்மாணிப்புக்கள் எவை?
   (1) **2, 5, 6** (2) **2, 5, 8** (3) **5, 6, 7** (4) **6, 7, 8** (5) **7, 8, 9** (...2.....)



CamScanner
CamScanner

- 11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

11. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதிமை ஓவியம்
    (1) ஜே. டீ. ஏ. பெரேரா கலைஞருடையதாகும்.
    (2) ஸ்டேன்லி அபேசிங்க அவர்களுடையதாகும்.
    (3) ஏ. சீ. ஜீ. எஸ் அமரசேகர அவர்களுடைதாகும்.
    (4) ஹரி பீரிஸ் கலைஞருடையதாகும்.
    (5) டேவிட் பெயின்டர் கலைஞருடையதாகும். (....1....)

12. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மேரி கசற் கலைஞரின் ஓவியங்களில்
    (1) அகடமிக் யதார்த்தவாத உத்திகள் கையாளப்பட்டுள்ளன.
    (2) தனிமை மற்றும் பல்வேறு உளச்சிக்கல்களை வெளிப்படுத்துகின்றது.
    (3) வர்ணங்களிலுள்ள எதிர்வினைத் தன்மை ஒழுங்குபடுத்தல் தந்திரோபாயமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.
    (4) பண்டைய படவாக்க படிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.
    (5) பின்னணி அத்தியாவசியமானதொரு அம்சமாக சித்திரிக்கப்பட்டுள்ளது. (....3....)

13. C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஐஸ்ரின் தெரணியகல கலைஞரின் இவ்வோவியம்,
    (1) உருவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை கலைப் பாணிகளையும் வெளிக் காட்டுகின்றது
    (2) பொருட்களின் தன்மையை இயற்கையாக முன்வைத்ததொன்றாகும்.
    (3) வெளிப்பாட்டுவாத கலை பண்புகளுடனான மையநிலைப்பட்ட ஒழுங்கமைப்பைக் கொண்டதாகும்.
    (4) சாஸ்திராலய நுட்ப முறைகளுக்கேற்ப வரையப்பட்ட வெளிப்பாடாகும்.
    (5) யதார்த்தவாத, கனவடிவவாத கலைப் பண்புகள் கலந்ததாகும். (....3....)

14. D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள டபிள்யூ. ஜே. ஜீ பீலிங் கலைஞரின் ஓவியம்
    (1) வடிவங்கள் இருபரிமாண வடிவில் தளம் முழுவதும் பரவிச் செல்லுமாறு காட்டப்பட்டுள்ளது.
    (2) இயற்கையான ஆக்கபூர்வமான வடிவங்கள் பலவற்றின் சேர்க்கையிலான நிர்மாணமாகும்.
    (3) எதிர்வர்ண பயன்பாட்டினால் இயற்கைத் தன்மையை விகாரப்படுத்திக் காட்டுகின்றது.
    (4) அசையாத பொருட் கூட்டமொன்றை கனவடிவவாத வடிவில் காட்டப்பட்டுள்ள வெளிப்படுத்தலாகும்.
    (5) இரு பரிமாண மற்றும் முப்பரிமாண வடிவங்களை அர்த்தமுள்ள வகையில் ஒன்றாக பொருத்துதலாகும். (....4....)

15. E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அம்ரிதா ஷேர்கில் கலைஞரின் ஓவியம்
    (1) சாஸ்திராலய அறிவினால் போசிக்கப்பட்ட ஓவிய மொழியைக் கொண்டதாகும்.
    (2) பாரம்பரிய வர்ணங்களினால் பாரம்பரியமல்லாத கருப்பொருளை அழகுபடுத்தியதாகும்.
    (3) கிராமிய கலாசாரம், கலைப்பாணியுடன் கட்டியெழுப்பப்பட்டதாகும்.
    (4) பல்வகை நிறங்களின் தன்மையினால் கருப்பொருளின் கருத்தைக் காட்டுவதாகும்.
    (5) நவீனவாத கலைப் பிரவேச பாணியில் முன்வைக்கப்பட்ட படைப்பாகும். (....2....)

PAST PAPERS WIKI



Past Papers Wiki
CamScanner
CamScanner

- **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை பின்வரும் F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அம்பக்க தேவாலய செதுக்கல்
(1) பல மனித உருவங்களை தேசியப் பண்புகளுடன் அமைக்கப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(2) மரச் செதுக்கல் கலைஞரின் சிறப்பைக் காட்டும் நிர்மாணிப்பாகும்.
(3) மர ஊடகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டதாகும்.
(4) சட்டகத்தினுள் அரிதான கருப்பொருள் படவாக்கமாகும்.
(5) சமகால சமூக கருப்பொருளை தாழ் புடைப்பாக காட்டுவதாகும். (...5...)

**17.** **G** எழுத்தினால் காட்டப்படுவது,
(1) நடனமாதர்களை சித்திரிக்கும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(2) சமய ஊர்வலமொன்றைக் காட்டும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(3) கடலாதெனிய நுழைவு மண்டபத்தில் காணப்படும் தாழ் புடைப்பு செதுக்கலாகும்.
(4) யாப்பகுவை அரச சபையின் அடித்தளத்தில் காணப்படும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(5) நடனமாடும், இசைக் கருவிகளை இசைக்கும் பெண்களின் உருவங்களைக் கொண்ட சட்டகச் செதுக்கலாகும். (...4...)

**18.** **H** எழுத்தினால் காட்டப்படும் சாஞ்சித் தோரணத்தில்
(1) பௌத்த சமய செய்திகள் செதுக்கப்பட்டுள்ள
(2) கிடைச் சட்டகம் (உடலிபத்) புத்தரின் வாழ்க்கைச் சமபவஙகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செதுக்கலாக்கப்பட்டுள்ளது.
(3) நிலைகுத்து தூண்களில் வரலாற்றுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு செதுக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.
(4) குறியீடுகளைப் பயன்படுத்தி புத்தரானதன் பின்னதான நிகழ்வுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
(5) கிடைச் சட்டகத்தில் (உடலிபத்தில்) உள்ள செதுக்கல்கள் தொடர்ச்சியாக கதை சொல்லும் பாங்கில் செதுக்கப்பட்டுள்ளன (...4...)

**19.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அமராவதியிலுள்ள நாலாகிரி யானையை அடக்குதல் செதுக்கல்
(1) கலைஞரின் பாவங்களை வெளிப்படுத்தும் ஆற்றலை சிறப்பாக எடுத்துக்காட்டும் விசேட சட்டக நிர்மாணிப்பாகும்.
(2) தளம் முழுவதும் மனித மற்றும் விலங்கு உருவங்கள் பரவிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட செதுக்கலாகும்.
(3) யானை உருவங்களை இருமுறை பயன்படுத்தியதன் மூலம் சலிப்பான ஒழுங்கமைப்பைக் காட்டுவதாகும்.
(4) உயிரோட்டம் மற்றும் செயற்பாட்டினை குறைந்த மட்டத்தில் சித்திரிக்கும் வட்டவடிவ பலகையாகும்.
(5) கலைஞரின் குறியீட்டு பயன்பாடு மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதைக் காட்டும் நிர்மாணமாகும். (...1...)

**20.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) உரோமர்கள் தமது யுத்த வெற்றிச் செய்தியை பயன்படுத்தி அமைக்கப்பட்ட வில் வளைவு செதுக்கலாகும்.
(2) ஜெருசலேம் சுற்றிவளைப்பைக் காட்டும் உரோம வில் வளைவு செதுக்கலாகும்.
(3) உரோம கட்டடக்கலை நிர்மாணமொன்றை அலங்காரப்படுத்திய செதுக்கலாகும்.
(4) டேசியான் இராணுவத்தின் தோல்வியைக் காட்டும் வில் வளைவுச் செதுக்கலாகும்.
(5) கொன்ஸ்டன்டைன் சக்கரவர்த்தியின் யுத்த வெற்றியைக் காட்டும் வில் வளைவு செதுக்கலாகும். (...5...)



CamScanner
CamScanner

- **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** **K** எழுத்தினால் காட்டப்படும் சிலை
 (1) மகாராஜலீலா நிலையில் அமர்ந்திருக்கும் போதி சத்துவரின் உருவமாகும்.
 (2) பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட பத்மபாணி போதிசத்துவரின் உருவாகும்.
 (3) அனுராதபுர இறுதி அரைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அவலோகிதேஷ்வரர் போதிசத்துவர் உருவமாகும்.
 (4) இந்து சமய செல்வாக்கிற்குட்பட்ட வார்ப்பு நுட்பமுறைக்கேற்ப தயாரிக்கப்பட்ட வெண் கலத்திலான சிலையாகும்.
 (5) வெற்று வார்ப்பு முறையில் பூரணப்படுத்தப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட போதிசத்துவரின் சிலையாகும். (…3….)

**22.** **L** எழுத்தினால் காட்டப்படும் ஹென்றி மூரின் சிற்பம்,
 (1) சாஸ்திராலய இயற்பண்புகளை மாற்றியமைத்தவொன்றாகும்.
 (2) பூங்கா சிற்பமொன்றிற்காக தயாரிக்கப்பட்ட வெண்கல ஊடகத்தினால் அமைக்கப்பட்ட நிர்மாணமாகும்.
 (3) சாய்ந்திருக்கும் பெண்ணொருவரின் உருவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட வெளிப்படுத்தலாகும்.
 (4) பெண்மையை சித்திரிக்கும் வடிவங்களைக் கொண்ட ஆக்கமாகும்.
 (5) உடலின் கோறைப் பகுதிகளின் ஊடக சுற்றுச்சூழலுடன் இணைந்த கட்புல வெளிப்படுத்தலாகும்.(…5….)

**23.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள டேவிட் சிலை நிர்மாணிப்பின்போது கலைஞர் மிகவும் கவனம் செலுத்தியது,
 (1) மனித உடல் கட்டமைப்பு அம்சங்கள் தொடர்பாக தனது திறமையைக் காட்டுவதற்காகும்.
 (2) தளர்வானதும் சுதந்திரமானதும் சந்தர்ப்பமான வடிவங்களை தொகுத்துக் காட்டுவதற்காகும்.
 (3) வெண்பளிங்கு கல்லுடன் இணைக்கப்படாமல் ஹெலனிஸ்டிக் கால சிறந்த பண்புகளை இணைப்பதற்காகும்.
 (4) வீரனொருவரிடம் காணப்படும் ஆளுமைப் பண்புகளுடனான சக்தியின் குறியீடொன்றை நிர்மாணிப்பதற்காகும்.
 (5) நுண்ணறிவு மற்றும் சிந்தனைப் பார்வையுடனான மனிதரொருவரை நிர்மாணிப்பதற்காகும். (…4….)

**24.** **N** எழுத்தினால் சித்திரிக்கப்படும் மைக்கல் ஆஞ்சலோவின் மோசஸ் சிலை நிர்மாணிப்பின் நோக்கம்
 (1) பத்து கட்டளைகளை குறியீடாகக் காட்டுவதற்கு கற்பலகையுடன் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (2) II வது ஜூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறையை குறியீடாகக் காட்டுவதாகும்.
 (3) சிஸ்டைன் தேவமனையில் கிரேக்க செந்நெறி கலையின் சிற்ப அம்சங்களை காட்சிப்படுத்துவதற்காகும்.
 (4) பாவங்களின் வெளிப்பாடுகள் மூலம் ஞானத்தின் மகிமையை காட்டுவதாகும்.
 (5) தீர்க்கதரிசி மற்றும் கட்டுமஸ்தான தேகக்கட்டமைப்புக் கொண்ட பண்டிதரொருவரை சித்திரிப்பதாகும். (…1….)

**25.** **O** எழுத்தினால் சித்திரிக்கப்படும் எகிப்திய சிலை
 (1) எகிப்திய புராதன இராசதானி காலத்திற்குரிய சுண்ணாம்புக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (2) மரபுரீதியான பண்புகளிலிருந்து விடுபட்ட புதிய இராசதானி கால சிலையாகும்.
 (3) அரசகுடும்பத்தைச் சேர்ந்த சேவகரொருவரை சித்திரிப்பதாகும்.
 (4) எழுத்து உபகரணங்களைக் கொண்டு எழுதுபவரொருவரைச் சித்திரிக்கும் செதுக்கலாகும்.
 (5) மத்திய இராசதானி காலத்தின் செயற்பாட்டை சித்திரிக்கும் சிலையாகும். (…1….)



CamScanner
CamScanner

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** பின்வரும் ஓவியர்களுடன் தொடர்புபடும் கலை இயக்கங்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
**ஜோர்ஜ் பிராக், எட்காடெகா, சல்வடோர் டாலி, வசிலி கன்திஸ்கி** மற்றும் **வின்சன்ட் வன்கோ**
(1) அருபவாதம், பின் மனப்பதிவுவாதம், கனவடிவவாதம், மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம்
(2) மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், பின் மனப்பதிவுவாதம், அருபவாதம், கனவடிவவாதம்,
(3) பின் மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், கனவடிவவாதம், அருபவாதம், மனப்பதிவுவாதம்
(4) கனவடிவவாதம், மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், அருபவாதம், பின் மனப்பதிவுவாதம்
(5) மீயதார்த்தவாதம், கனவடிவவாதம், பின் மனப்பதிவுவாதம், அருபவாதம், மனப்பதிவுவாதம் (….4….)

**27.** சுவரொட்டி என்பது,
(1) ஏதேனும் கருப்பொருளை குறியீடாக வெளிப்படுத்தும் ஊடகமாகும்.
(2) ஏதேனும் ஒரு செய்தியை எளிமையாக, தெளிவாக, வேகமாக மேற்கொள்ளும் பிரச்சார ஊடகமாகும்.
(3) சமகால கருப்பொருளொன்றை மனங்கவரும் வகையில் கட்புல ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு சமூகமயப்படுத்தும் பிரபல்யமான ஊடகமாகும்.
(4) தொடர்பாடல் செயற்பாட்டில் வேகமான பிரசார ஊடகமாகும்.
(5) சிக்கலான கருப்பொருளொன்றை அச்சு பதிக்கப்பட்ட ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்தும் தொடர்பாடலாகும். (….2….)

**28.** யதார்த்த வாதம் என்பது,
(1) தூரநோக்கு, முப்பரிமான பண்புகள் ஆகிய கட்புல கலைக்கோட்பாட்டை சரியாக வெளிப்படுத்துவதாகும்.
(2) இயற்கையான உலகில் இயற்கையான மற்றும் செயற்கைப் பொருட்களை உள்ளவாறே வரைதலாகும்.
(3) மேற்கத்திய உலகால் அறிமுகப்படுத்தப்படும் சாஸ்திராலய கோட்பாடுகளை பாதுகாப்பதாகும்.
(4) உண்மையான உலகத்தில் காணப்படும் பொருட்களை அருபவடிவில் வெளிப்படுத்தலாகும்.
(5) பொருட்களின் உண்மையான வடிவங்கள் பல கோணங்களில் அவதானித்து வெளிப்படுத்துவதாகும். (….2….)

**29.** பின் மனப்பதிவாத நிர்மாணிப்பில் கலைஞர்கள் மிகவும் கவனம் செலுத்தியது
(1) மனப்பதிவுவாத நுட்பமுறைகளை புதுமையுடன் தொடர்ந்து கொண்டு நடத்துவதற்காகும்.
(2) ஒரேவிதமான சலிப்பான நிலவும் மனப்பதிவுவாத நுட்பமுறையை மீறுவதற்காகும்
(3) புதிய பரீட்சித்தலும் ஆழ்ந்த புதிய வெளிப்பாடுகளுடனான பொருட்களை ஆராய்வதுமாகும்.
(4) மனப்பதிவுவாதிகள் பயன்படுத்திய நுட்பமுறைகளுக்குப் பதிலாக புதிய நுட்பமுறைகளை ஆய்வு செய்வதாகும்.
(5) பொருட்களின் மீது ஒளியின் எதிர்வினையை ஆராய்தலாகும். (….3….)

**30.** அருபவாதத்திற்கு அடிப்படையாக அமைவது
(1) அடையாளம் காணக்கூடிய வடிவம் அல்லாத கட்புல வெளிப்படுத்தல்களுக்கானதாகும்
(2) கற்பனை நோக்கங்கள் மற்றும் கட்டியெழுப்பப்பட்ட அருபவடிவங்களை வெளிப்படுத்தல்களுக்காகும்.
(3) இயற்கைக் கட்புல வடிவங்களை காட்சிரீதியாக எளிமைப்படுத்தி மீள் உருவாக்கம் செய்தலாகும்
(4) இயற்கை அல்லது அதன் பொருட்கள், அதே விதமாக போலச்செய்தல் மற்றும் மீள் உருவாக்கம் செய்தலைக் கைவிடுதல் ஆகும்.
(5) கோடுகளினால் கட்டியெழுப்பப்பட்ட அசையும் மற்றும் நெகிழ்வான வடிவங்கள், நிறங்களை பயன்படுத்தல். (….4….)

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** அம்பக்க தேவாலயம் கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெறுவது,



(1) முருகனுக்காக அமைக்கப்பட்ட தேவாலயமாக இருப்பதனாலாகும்.
(2) தெல்மடை மூலாச்சாரியாரின் சிறப்பான நிர்மாணிப்பு என்பதனாலாகும்.
(3) கூரை நிர்மாணத்தின்போது பயன்படுத்தப்பட்டுள்ள புதிய நிர்மாண அம்சங்களாகும்.
(4) மர ஊடகத்தை கலையம்சரீதியில் பயன்படுத்தியுள்ள விதம் காரணமாகவாகும்.
(5) திறந்த மண்டபமாக அமைக்கப்பட்டுள்ள கட்டட வடிவமைப்பின் காரணத்தினாலாகும். (….3….)

**32.** இங்கு படத்தில் காணப்படுவது



(1) அனுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட ஹத்திக்குச்சி விகாரை வட்டதாகையாகும்.
(2) இரண்டு மண்டபங்களை கொண்ட திரியாய் வட்டதாகையாகும்.
(3) பொலன்னறுவை தலதா முற்றத்தில் காணப்படும் வட்டதாகையாகும்.
(4) இரண்டு கற்றூண் வரிசைகளின் மேல் கூரை வைக்கப்பட்டிருக்கும் மெதிரிகிரிய வட்டதாகையாகும்.
(5) அனுராதபுர காலத்தின் அம்பஸ்தல வட்டதாகையாகும். (….4….)



CamScanner
CamScanner

**33.** இங்கு காணப்படும் இராஜராஜேஸ்வரம் கோயில்,



(1) சோழ கட்டடக்கலை நிர்மாண பண்புகளுக்கேற்ப தஞ்சாவூரில் அமைந்துள்ள கோவிலாகும்.
(2) கருங்கற்களைக் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பைக் கொண்ட கோவிலாகும்.
(3) 1வது இராஜராஜ மன்னனால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய கோவிலாகும்.
(4) கோபுரங்களுடனான விமானங்கள் மற்றும் சிகரங்களை உடைய இந்து கோவிலாகும்.
(5) தென்னிந்திய கலை மரபிற்கேற்ப கற்களால் அமைக்கப்பட்ட கோவிலாகும். (...1...)

**34.** இங்கு காணப்படுவது



(1) கி.மு. 2570 இல் அமைக்கப்பட்ட மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(2) கப்றே மன்னனால் அமைக்கப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(3) எகிப்தின் மூன்று பெரிய பிரமிட்களுள் ஒன்றான குப்பு (kufu) பிரமிட்டாகும்.
(4) எகிப்தில் மத்திய இராசதானி காலத்தில் அமைக்கப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(5) கப்றே பாராவோவின் கல்லறையாக அமைக்கப்பட்ட பிரமிட்டாகும். (...5...)

**35.** இங்கு காட்டப்பட்டுள்ளது,



(1) சமோரா ஹேரா தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட இரெக்தியன் கட்டிடத்தின் அயோனிக் தூணாகும்.
(2) ஏதன்ஸில் சியுஸ் தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட தேவாலயத்தின் கொரிந்தியன் தூணாகும்.
(3) அதீனா தேவதைக்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலயத்தின் டொறிக் தூணாகும்.
(4) ஏதன்ஸில் சியுஸ் தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலயத்தின் அயோனிக் துணாகும்.
(5) அதீனா தேவதைக்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலய கொரிந்தியன் தூணாகும். (...2...)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** இலங்கை கலைச் சங்கத்தின், ஏ. சீ. ஜீ. எஸ் அமரசேகர கலைஞர்,

(1) கீழைத்தேய ஓவியப் பாணியை அடிப்படையாகக் கொண்டவராவ
(2) சாஸ்திராலய யதார்த்தவாத விதிமுறைகளை பின்பற்றிய ஒருவர.
(3) கதை ஓவியத்திற்காக ஆர்வம் காட்டியவராவார்.
(4) மரபுரீதியான ஓவிய வழிமுறைகளைப் பின்பற்றிய ஒருவராவார்.
(5) தனக்கேயுரிய மரபொன்றை பின்பற்றிய ஒருவராவார். (...2...)

PAST PAPERS WIKI



CamScanner
CamScanner

37. இங்கு கருப்பொருளின் ஊடாக சித்திரிக்கப்பட்டுள்ளது
- (1) யதார்த்தவாதமாக மனித உருவங்களை வரைவதற்கு எடுத்த முயற்சியாகும்.
- (2) மத்தியதர வர்க்கத்தினரின் குடும்ப வாழ்க்கைத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விவரிப்பாகும்.
- (3) ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஏழ்மைத் தொடர்பான வெளிப்படுத்தலாகும்.
- (4) கிராமிய வாழ்க்கைத் தொடர்பாக குறியீடாக மேற்கொள்ளப்பட்ட விவரிப்பாகும்.
- (5) கிராம வாழ்க்கையின் துக்ககரமான சந்தர்ப்பத்தை மீள் நிர்மாணம் செய்வதாகும். (...3....)

38. ஒழுங்கமைப்பின் அடிப்படை நோக்கமானது
- (1) மனித மெய் நிலைகள் நிகழ்விற்கேற்ப இருப்பதைப்போன்றே ஒழுங்கமைத்தலாகும்.
- (2) மனித உருவங்களைப்போன்றே பல்வேறு பொருட்கள் ஒன்றிற்கொன்று பொருந்தும்வகையில், முன்வைத்தலாகும்.
- (3) மனித உருவங்களைக் காட்டிலும் பொருட்களின் வெளிப்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.
- (4) கருப்பொருளை விவரிப்பதற்கு பல உருவங்களை குறியீடுகளாக பயன்படுத்துவதாகும்.
- (5) வர்ணங்களைக் கலப்பதன் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு முதலிடம் வழங்குவதாகும். (....4....)

39. 'தச்சனின் வீடு' ஓவியத்தில்
- (1) பண்டைய வர்ணங்கள் சிறப்பாக எண்ணெய் ஊடகம் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- (2) இயற்கையைப் போலச் செய்வதற்காக பொருத்தமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- (3) ஒளி மற்றும் இருளுக்கிடையில் கடும் எதிர்வினைகள் வெளிப்படும் வகையில் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- (4) பல்வகை வர்ண அம்சங்கள் உள்ள பண்டைய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- (5) வர்ண பயன்பாட்டின்போது வர்ண மாற்றம் தெரியும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (...3.....)

40. உணர்வுகளின் வெளிப்பாடு தொடர்பான மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.
- (1) மத்திய வர்க்க சமூகத்தின் வறுமை மனித உருவங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறை பாராட்டத்தக்கது
- (2) மனித உருவங்கள் உணர்வுகள் வெளிப்படும் வகையில் பயன்படுத்தியிருக்கும் விதம் போற்றத்தக்கது.
- (3) குறியீடுகளைப் பயன்படுத்தி வெளிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது.
- (4) யதார்த்தபூர்வமாகவும், உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் மனித உருவங்கள் உட்பட அனைத்தும் வரையப்பட்டிருக்கும் விதம் போற்றத்தக்கது
- (5) மனித உருவங்களின் வெளிப்புற அழகைப் போன்றே உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த எடுத்த முயற்சி சிறப்பானது. (....4....)

* *



CamScanner
CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அநுராதபுரத்தில் தொடங்கிய புதிய கட்டடக்கலைப் புத்துயிர்ப்பு பௌத்தசமய கட்டடக்கலையில் பல நிர்மாணிப்புகள் தோன்றுவதற்கு காரணமாயிற்று.

(i) பிக்குமார்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** மனை வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நில்லக்கம போதிமனை தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரட்டைக் கேணி மற்றும் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைத் தடாகம் என்பன சிறந்த கலைப்பாங்கிலான நிர்மாணிப்புகளாகும். மாதிரி மற்றும் கலைத்துவ திறன்கள் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

**2.** இலங்கையில் சமயசார்பான ஓவிய நிர்மாணிப்பில் ஈடுபட்ட ஓவியக் கலைஞர்கள் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் சிறந்த நிர்மாணங்களை உருவாக்கினார்கள்.

(i) நாராயணசுவாமி கலைஞரால் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் வரையப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) டேவிட் பெயின்டர் (David Paynter) கலைஞரால் வரையப்பட்ட கண்டி திரித்துவ கல்லூரி தேவ ஆராதனை மண்டபத்தில் காணப்படும் 'நல்ல சமாரியன்' ஓவியம் தொடர்பாக சுருக்கமாக மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை பௌத்த ஓவியக் கலைஞர்கள் பல்வேறு விதமாக வரைந்துள்ளனர். பொரல்லை கோதமி விகாரை ஓவியத்தை வரைந்த ஜோர்ஜ் கீட் மற்றும் பெல்லன்வில ரஜ மகா விகாரை ஓவியத்தை வரைந்த சோமபந்து வித்தியாபதி கலைஞர்கள் 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை வரைந்த விதம் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

**3.** பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பல சமயச் சிலைகள் கோயில்களுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ளன.

(i) இந்து சமய சிலைகளை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தப்பட்ட **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிவ சோமஸ்கந்த சிலை தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்து சமய சிலைகளுக்கிடையில் நடராஜர் சிலை விசேடமானதாகும். அதன் குறியீட்டு வெளிப்பாடுகள் மற்றும் கலைப் பண்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)



CamScanner
CamScanner

## பகுதி - ஆ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

4. காந்தார மற்றும் மதுரா குருகுலங்கள் பௌத்தசமய சிற்பங்கள் பலவற்றை உலகுக்கு தோற்றுவித்த கலை மத்திய நிலையங்களாகும்.

   (i) காந்தார கலை மரபில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) புத்தர் சிலையின் தோற்றுவாய்க்காக காந்தார கலை மரபுகள் உதவியுள்ள விதத்தினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   (iii) மதுரா மற்றும் சாரணாத் குருகுலங்களின் நிர்மாணிப்புகள் குப்தர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு மதுரா மற்றும் சாரணாத் புத்தர் சிலைகளின் சிறந்த சிற்ப பண்புகள் மற்றும் உணர்வு வெளிப்பாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் விளக்குக. (08 புள்ளிகள்)

5. சிந்துவெளி நாகரிகம் மிக முன்னேற்றமடைந்த மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்த புராதன குடியிருப்பாகும்.

   (i) சிந்துவெளி மக்கள் கலைப் படைப்புக்களை நிர்மாணித்தபோது பயன்படுத்திய **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) சிந்துவெளி மக்கள் மனித உருவங்களை நுட்பமாக ஆராய்ந்து நிர்மாணிப்பதில் வல்லவராவர். **ஓர்** உதாரணம் மூலம் சுருக்கமாக இதனை அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

   (iii) சிந்துவெளி நாகரிகத்தில் மிக முன்னேற்றமடைந்த கட்டடக்கலை நிர்மாணத் தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கூற்றை அவர்களின் கட்டடக்கலை நிர்மாணங்களை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

6. ஐரோப்பாவில் அருகருகே அமைந்திருந்த இரண்டு இராச்சியங்களான கிரேக்கம் மற்றும் உரோமம் ஆகியன கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய நாடுகளாகும்.

   (i) கிரேக்க தொன்மைக்கால சிற்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) உரோம கட்டடக் கலையின் சிறந்த நிர்மாணமான ரொஜன் தூண் (The Trajan Column) தொடர்பாக சுருக்கமான கலைத்துவ மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

   (iii) கிரேக்க மற்றும் உரோம கலைஞர்கள் மனித உருவங்களை, ஓவியங்களுக்காக பயன்படுத்திய விதம் மற்றும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியாக மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

7. இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சிக் காலம் உன்னத கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய காலகட்டமாகும்.

   (i) மைக்கல் ஆஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) மறுமலர்ச்சிக் கலையின் பொதுப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

   (iii) லியானோ டாவின்சியின் 'பாறையின் மீது கன்னி மரியாள்' மற்றும் ரபாயெல் சன்சியோவின் 'அல்பா மடோனா' ஆகிய ஓவியங்கள் தொடர்பாக அவற்றின் மாதிரி மற்றும் கலைப் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒப்பீட்டுரீதியான பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

* * *



CamScanner
CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව II
சித்திரக்கலை II
Art II

51 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட **வரைதல் தாளைப் (Drawing paper)** பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- உமது விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

❋ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

❋ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

❋ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

❋ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

❋ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

❋ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

❋ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

❋ ❋ ❋



CamScanner
CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

**51 T III**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின் இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
* நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
* தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.
* சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

- பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை **மாத்திரம்** தெரிவுசெய்து, வர்ணச் சித்திரம் **ஒன்றை** வரைக.

## பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு

**1.** குரங்குக் கூட்டத்திற்குள் அகப்பட்ட உல்லாசப் பிரயாணிகள் சிலர்

**2.** கிராமியச் சூழலில் தொலைக்காட்சி நாடகப்படப்பிடிப்பு நடைபெறும் சந்தர்ப்பமொன்று

**3.** தானசாலையொன்றில் உங்கள் மனங்கவர்ந்த சந்தர்ப்பம் ஒன்று

**4.** கடும் மழையிலும் காற்றிலும் பாதிப்புக்குள்ளாகும் பாதசாரிகள்

## பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்

**5.** 4 அடி விட்டமுள்ள வட்டவடிவ மேசைக்குப் பொருத்தமான ஒரு பக்கம் 6 அடிகளைக் கொண்ட சதுர வடிவ மேசை விரிப்பொன்றின் மத்திய பகுதியை அடிப்படையாகக் கொண்டு வட்டவடிவில் பரவிச் செல்லுமாறு முழுத்தள அலங்காரமொன்றை மரபுரீதியான தாவர மற்றும் விலங்குருவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு நிறம் தீட்டுக. (அளவை பரிமாணத்திற்கேற்ப அமைக்குக).

**6.** வாகனங்கள் பலவற்றின் வடிவங்களை அலங்கார அலகாகப் பயன்படுத்தி மேல் சட்டைக்குப் பொருத்தமான பரவல் அலங்காரமொன்றை $9'' \times 9''$ அங்குல அளவில் தயாரித்து நிறம் தீட்டுக.

**7.** நீர்வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் தேசிய மட்ட செயலமர்வொன்றின் நுழைவுக் கதவின் முன்னால் காட்சிக்கு வைக்கப் பொருத்தமான $6' \times 12'$ அடி அளவில் பதாகையொன்றை திட்டமிட்டு நிறந்தீட்டுக (அளவினை பரிமாணத்திற்கேற்ப தயாரித்துக்கொள்க.)

## பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்

**8.** 'இழந்த பாசம்' எனும் பெயரில் எழுதப்பட்ட புதுக்கவிதை பாடல்களுக்காக அதன் உள்ளடக்கத்தை விவரிக்கும் வகையில் விளக்கச் சித்திரமொன்றை அருப வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்குக.

**9.** 'வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியக்கலை' எனும் பெயரில் எழுதப்பட்ட நூலொன்றிற்குப் பொருத்தமான மேலட்டையொன்றை திட்டமிட்டு நிறந்தீட்டுக. ((முன்னட்டை, தடிப்பு மற்றும் பின்னட்டை ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்)

**10.** உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பெண்களுக்கான வாசனைத் திரவியப் போத்தலொன்றை வெளிநாட்டுச் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்குப் பொருத்தமான வகையில் பொதியிடக்கூடிய பெட்டியொன்றின் தளவடிவம் தெரியும் வகையில் திட்டமிட்டு நிறந்தீட்டுக.



CamScanner
CamScanner

1. அநுராதபுரத்தில் தொடங்கிய புதிய கட்டடக்கலைப் புத்துயிர்ப்பு பௌத்தசமய கட்டடக்கலையில் பல நிர்மாணிப்புகள் தோன்றுவதற்கு காரணமாயிற்று.

   (i) பிக்குமார்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** மனை வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) நில்லக்கம போதிமனை தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   (iii) அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரட்டைக் கேணி மற்றும் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைத் தடாகம் என்பன சிறந்த கலைப்பாங்கிலான நிர்மாணிப்புகளாகும். மாதிரி மற்றும் கலைத்துவ திறன்கள் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

(i) பிக்குமார்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** மனை வகைகளைக் குறிப்பிடுக.

- பதனாகர (தியான மனை)
- ஜந்தாகர
- உபதேசதகர

**(02 புள்ளிகள்)**

(ii) நில்லக்கம போதிமனை தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

**நில்லகம போதிகர** –

- அரச மரத்தைச் சுற்றி பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கூரையுடன் கூடிய சக்மன் மலுவையும் (வலம் வரும் பகுதி) சுவர்களையும் கொண்ட கட்டிடம் போதிகர எனப்படும்.
- அனுராதபுரக் காலத்திற்குரிய இக் கட்டிடம் கி.பி-(8-9) நுற்றாண்டிற்குரியதாகும்.
- இது சதுரவடிவமாக இரண்டு மண்டபங்களைக் கொண்டது.
- குருநாகல் மாவட்டத்தில் கல்கமுக பிரதேசத்தில் காணப்படுன்கிறது.
- முற்றுமுழுதாக கருங்கல்லால் ஆக்கப்பட்டது.
- முதலாவது மண்டபத்தை சூழ குறுக்கு மதில் காணப்படுகின்றது.
- இரண்டாவது மண்டபம் 34 அடி சதுர மேடை மீது அமைக்கப்பட்டுள்ளது.
- ஏழு அடி உயரமான மதில்களில் யானைத்தலை செதுக்கல் வேலைப்பாடுகள் காணப்படுகின்றது.
- ஏழு அடி உயரமான மதிலுடன் இணைந்ததாக 16 கற்தூண்கள் உள்ளது.
- இதன் மீது கூரை இருந்ததாக கருதப்படுகின்றது.
- இரண்டாவது மண்டபத்தின் மத்தியில் அரசமரம் காணப்படுகின்றது.
- இதற்கான நுழைவாயில்கள் கிழக்கிலும் மேற்கிலும் என இரண்டு நுழைவாயில்கள் காணப்படுகின்றது.
- நுழைவாயிலின் கதவு நிலையானது செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது.
- இதில் குதிரை மீது அமர்ந்துள்ள வாமன வடிவம் காணப்படுகின்றது.
- நுழைவாயிலில் செதுக்கல்கள் அற்ற சந்திர வட்டக்கல் காணப்படுகின்றது.
- அத்தோடு சிறிய கைப்பிடிசுவரும் அதில் மகரவாய் வடிவ அலங்காரமும் காணப்படுகின்றது.

**(05 புள்ளிகள்)**

(iii) அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரட்டைக் கேணி மற்றும் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைத் தடாகம் என்பன சிறந்த கலைப்பாங்கிலான நிர்மாணிப்புகளாகும். மாதிரி மற்றும் கலைத்துவ திறன்கள் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க.

- இரட்டைக்குளமானது அனுராதபுரக்காலத்திற்குரியது ஆகும்.
- இது அபயகிரி விகாரை நிலப்பரப்பில் அமைந்த மேன்மை வாய்ந்த வடிகால் மற்றும் கட்டிட நிர்மானிப்பாகும்.
- இது பிக்குமார்களின் தேவைக்காக கட்டப்பட்டது.
- தாமரைத்தடாகமானது பொலநறுவைக் காலத்திற்குரியதாகும்.
- ஜேதவன ராமய விகாரை, (திவங்க ஆலயம்) பூமியில் காணப்படுகின்றது.



CamScanner
CamScanner

- இரட்டைத் தடாகம் மற்றும் தாமரைத் தடாகம் நிர்மாணமானது பிக்குமாரின் பாவனைக்காக அமைக்கப்பட்ட போதிலும் தாமரைத்தடாக நிர்மாணிப்பு மன்னர்களின் கலை நிபுணத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.
- இரட்டைத் தடாகம் (குட்டப் பொக்குன) பெரிது சிறிதாக இரண்டு தடாகம் காணப்படுகின்ற போதிலும் தாமரைத் தடாகம் ஒன்று மட்டுமே உள்ளது.

**குட்டப்பொக்குன (இரட்டைத்தடாகம்) திட்ட அமைப்பு**

- செவ்வக வடிவில் அமைக்கப்பட்ட எளிமையான வடிவமாகும்.
- சிறிய தடாகம் வடக்கு திசையிலும் பெரிய தடாகம் தெற்கு திசையிலும் அமைக்கப்பட்டுள்ளது.
- பெரிய குளம் 132 அடி நீளமும் 51 அடி அகலமும் கொண்டது.
- சிறிய குளம் 91 அடி நீளமானது. இரண்டு குளங்களும் நிலமட்டத்தில் இருந்து 8 அடி 9 அங்குல ஆழத்தில் அமைந்த கல்லினால் ஆன கால்வாயினால் தொடுக்கப்பட்டுள்ளது.
- 5 படிக்கட்டுகள் காணப்படுகிறது

**தாமரைத்தடாக திட்ட அமைப்பு** – பொலன்நறுவ

- மலர்ந்த தாமரை பூ அமைப்பைக் கொண்டது.
- இது 24 அடி விட்டமுடையது. அது கீழ் நோக்கி செல்லும் போது படிப்படியாகச் சிறிதாக செல்லும் வகையில் 08 மட்டங்களில் அமைந்துள்ளது.
- இதன் ஆழம் 05 அடி ஆகும்.

**அநுராதபுர குட்டம் பொக்குணவில் கலைத்துவ திறன்கள்**

- குட்டம் பொக்குண சிறந்த நீர் முகாமைத்துவம் கொண்டதாக காணப்படுகின்றது.
- இதற்கான நீர் ஆனது அருகில் உள்ள அபயகிரி வாவியில் இருந்து சுரங்க வழி ஊடாக பெறப்படுகின்றது.
- அத்தோடு இயற்கையான நீரை வடிகட்டுவதற்கான அமைப்புகள் காணப்படுகின்றது.
- இவ்வாறு வடிகட்டி வரும் நீர் ~~சிங்க~~ வாயினூடாக வரும் வகையில் காணப்படுகின்றது.
- சிறிய குளம் பெரிய குளத்தைக் காட்டிலும் சற்று உயர்வாக உள்ளது.
- சிறிய குளத்தில் பெரிய குளத்துக்கான நீர் வழங்கப்படுவதோடு சிறிய குளத்தின் நடுப்பகுதியில் நீரை வெளியேற்றும் வழி ஒன்று காணப்படுகின்றது.
- நான்கு பக்கத்து நுழைவாயில்களிலும் புன்கலசன்கள் காணப்படுகின்றது.
- சிறிய குளத்தில் இருந்து வடக்குப் புறமாக நாகவடிவமுடைய காவற்கல் காணப்படுகின்றது.

**தாமரைத் தடாகத்தின் கலைத்திறன்கள்**

- பொலநறுவைக் கால கலைஞரின் திறனைக் காட்டுகின்றது.
- தாமரைப் பூவின் மென்மைத் தன்மையை கரடு முரடான கருங்கல்லின் மூலம் வெளிப்படுத்திக் காட்டியமை சிறப்பானதாகும்.
- தாமரைப்பூவில் இயற்கையான தன்மை சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது.
- எந்தவித சாந்துமின்றி கருங்கற்களை அடுக்கி ஆக்கப்பட்டுள்ளது.
- இதற்கான நீர் வடிகால் அமைப்பு இரட்டைத் தடாகம் போன்று சிறப்பாக அமையவில்லை.
- இதற்கான நீரை கொண்டு வருவதற்கும் வெளியேற்றுவதற்கும் சுரங்கவழி பயன்படுத்தப்படுகின்றது

**(08 புள்ளிகள்**



CamScanner
CamScanner

2. இலங்கையில் சமயசார்பான ஓவிய நிர்மாணிப்பில் ஈடுபட்ட ஓவியக் கலைஞர்கள் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் சிறந்த நிர்மாணங்களை உருவாக்கினார்கள்.

(i) நாராயணசுவாமி கலைஞரால் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் வரையப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) டேவிட் பெயின்டர் (David Paynter) கலைஞரால் வரையப்பட்ட கண்டி திரித்துவ கல்லூரி தேவ ஆராதனை மண்டபத்தில் காணப்படும் 'நல்ல சமாரியன்' ஓவியம் தொடர்பாக சுருக்கமாக மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை பௌத்த ஓவியக் கலைஞர்கள் பல்வேறு விதமாக வரைந்துள்ளனர். பொரல்லை கோதமி விகாரை ஓவியத்தை வரைந்த ஜோர்ஜ் கீட் மற்றும் பெல்லன்வில ரஜ மகா விகாரை ஓவியத்தை வரைந்த சோமபந்து வித்தியாபதி கலைஞர்கள் 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை வரைந்த விதம் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

(i) நாராயணசுவாமி கலைஞரால் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் வரையப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக.

அசுர சங்காரம் சூரசங்காரம் முருகன், விநாயகர், புராணக்கதை தொடர்பான ஓவியங்கள் வல்வெட்டித் துறை முத்து மாரியம்மன் கோயில் வரலாற்று ஓவியங்கள். (நான்கு பகுதிகளாக வரையப்பட்டுள்ளது.

**(02 புள்ளிகள்)**

(ii) டேவிட் பெயின்டர் (David Paynter) கலைஞரால் வரையப்பட்ட கண்டி திரித்துவ கல்லூரி தேவ ஆராதனை மண்டபத்தில் காணப்படும் 'நல்ல சமாரியன்' ஓவியம் தொடர்பாக சுருக்கமாக மதிப்பீடு செய்க.

- கி.பி. 1900-1975 காலப்பகுதியில் மேற்குலக ஓவிய கலை மரபை அடிப்படையாகக் கொண்டு தனித்துவமான கலைப்பணியை உருவாக்கிய கலைஞராக டேவிற்பெயின்டர் விளங்கினார்.
- கண்டித் திருத்துவ கல்லூரியில் உள்ள உள்மண்டபச்சுவரில் பைபிலில் இடம் பெற்ற நல்ல சமாரியன் ஓவியத்தை வரைந்துள்ளார்.
- இவ் ஓவியம் வர்ணம் மங்கிப்போன நிலையில் 1957 இல் இவரே புணர்நிர்மானம் செய்துள்ளனர்.
- திரித்துவ தேவாரதனை மண்டபத்தின் இடது பக்கச் சுவரில் ஓவியத்தைக் காணலாம். இதுவும் கிறஸ்தவத்தின் கருத்தையே கருப்பொருளாகக் கொண்டு 12x8 அடிப்படையில் வரையப்பட்டுள்ளது .
- இயேசு நாதர் போதித்த உண்மைக் கதை யொன்றின் ஓர் அங்கமே இவ் ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த ஒருவருக்கு நல்லசமாரியன் உதவி புரியும் சந்தர்ப்பமே இதுவாகும்.
- இவ் ஓவியத்தில் கிராமியச் சூழல் காணப்படுகின்றது..
- இவ் ஓவியத்தில் முன்னனி, இடைஅணி, பின்னனி என மூன்று தளங்களில் உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- தூரதரிசன நுட்பமுறைகள் சிறப்பாக கையாளப்பட்டு உள்ளன.
- இவ் ஓவியத்தில் மனித உருவங்கள் நம் நாட்டுக்குரிய ஆடை ஆபரணங்களில் காட்டப்பட்டுள்ளதோடு பின்னனி காட்சிகளும் இலங்கைச் சூழல் காட்சிகள் காட்டப்பட்டுள்ளது.
- இவ் ஓவியம் ஐரோப்பிய அக்கடமி கலைக்கோட்பாட்டு பாணியில் காணப்படுகினறது.
- [illegible] **(05 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI



Past Papers Wiki
CamScanner
CamScanner

(iii) 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை பௌத்த ஓவியக் கலைஞர்கள் பல்வேறு விதமாக வரைந்துள்ளனர். பொரல்லை கோதமி விகாரை ஓவியத்தை வரைந்த ஜோர்ஜ் கீட் மற்றும் பெல்லன்வில ரஜ மகா விகாரை ஓவியத்தை வரைந்த சோமபந்து வித்தியாபதி கலைஞர்கள் 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை வரைந்த விதம் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க.

- இலங்கையின் பௌத்த நவீன ஓவியக்கலையின் சிறப்பான சுவரோவியங்கள் காணப்படும் இரண்டு இடங்களாக பொறளை கோதமி விகாரை, பொல்லன்வில விகாரை ஓவியங்கள் இரண்டையும் குறிப்பிடலாம்.
- இவ் ஓவியங்களிடையே மாரயுத்தம் (இயமனை தோற்கடித்தல்) எனும் சிறப்பான விடயம் முன்வைக்கின்றது.
- ஜோர்ஜ்கீட் கோதமி விகாரை மாராபராஜய ஓவியத்தில் கனவடிவாத மற்றும் ஐரோப்பிய நவீனவாத ஜோஜ்பிராக் மற்றும் பிக்காசோவின் நவீன மேற்தேய கலைப்பாணியை தழுவி பௌத்த தொனிப்பொருட்களை வரைந்துள்ளார்.
- சோமபந்து வித்தியாபதி பெல்லன்வில ரஜ மகாவிகாரை மாரயுத்தம் ஓவியத்தின் ஊடாக பாரம்பரிய பௌத்த ஓவிய கலைப்பாணி பண்புகள் மற்றும் கண்டிகால ஓவிய பாரம்பரிய பாணிகளை ஒன்றிணைத்து வரைந்துள்ளார்.
- பொறளை கோதமி விகாரை ஓவியத்தில் மாறனைக்காட்டுவதற்கு எளிமையான வடிவங்களையும் நேர்கோடுகள் குறுக்கு கோடுகள் வளைகோடுகள் என்பவற்றை பயன்படுத்தியுள்ளார்
- பெல்லவில விகாரை ஓவியத்தில் படையினரின் உருவங்கள் யதார்த்த தன்மையில் காட்டப்பட்டுள்ளதுடன் குரோத மற்று தீய எண்ணங்கள் மாறன் மற்றும் படைகளாக சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ஜோர்ஜ்கீட் மாராயுத்த ஓவிய வர்ண பாவனையில் அடிப்படை வர்ணங்கள் இருண்ட, தட்டையான முறையில் தீட்டப்பட்டுள்ளது.
- மஞ்சள், சிவப்பு, நீலம் போன்ற வர்ணங்களை முக்கியத்துவம் கொடுத்து வெள்ளை, பச்சை, கறுப்பு வர்ணங்களை பிரயோகித்து பிரகாசமான வர்ணங்களாக தீட்டப்பட்டுள்ளது.
- கோதமிவிகாரை ஓவியத்தில் புத்தர் உருவம் பத்மாசன முறையில் தியான முத்திரையை வெளிப்படுத்திகாட்டுகின்றது.
- பெல்லன்வில மாரயுத்த ஓவியத்தில் புத்த வடிவம் வீராசன நிலையில் தியான முத்திரையை வெளிப்படுத்தியவாறு காட்டப்பட்டுள்ளது.
- கோதமி விகாரை ஓவியங்களில் உருவங்கள் இயற்கை தன்மையை விட பாவ உணர்வை வெளிப்படுத்துவது முக்கியதுவப்படுத்தப்பட்டுள்ளது.
- பெல்லலன்வில விகாரை ஓவியத்தில் சந்தர்ப்பங்கள் மற்றும் உணர்வுகளை படைப்பதற்காக சந்த (லய) அசைவுகளைக் கொண்டு பரத மற்றும் கதகளி நடனமரபின் செல்வாக்குடன் பயன்படுத்தப்பட்டு இருத்தல் சிறப்பாகும்.
- இதில் புத்தபெருமான் தீய எண்ணங்களுடன் போராடுவது என்ற எண்ணக்கரு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- கோதமி விகாரை ஓவியங்களில் கண்டியுகத்தில் வரையப்பட்டுள்ள போன்று திகிலூட்டும் சம்பவங்கள் வரையப்பட்டுள்ளது. (உதரணம் :- மாரனின் வாயில் வெளிப்படும் பாம்பு)
- கோதமி விகாரை ஓவியங்கள் தொடர் கதைமுறையில் வரையப்பட்டுள்ளது.
- பெல்லன்வில விகாரை ஓவியம் தொடர் கதைமுறை அன்றி கதையின் முக்கியபகுதி ஓவியமாக வரையப்பட்டுள்ளது.
- இவ்வகையில் மாறயுத்தம் என்ற கருப் பொருள் இரு விகாரையிலும் வேறுபட்ட நுட்ப முறையில் வரையப்பட்டுள்ளது.

**(08 புள்ளிகள்**



CamScanner
CamScanner

**3.** பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பல சமயச் சிலைகள் கோயில்களுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ளன.

(i) இந்து சமய சிலைகளை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தப்பட்ட **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) சிவ சோமஸ்கந்த சிலை தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க.

(iii) இந்து சமய சிலைகளுக்கிடையில் நடராஜர் சிலை விசேடமானதாகும். அதன் குறியீட்டு வெளிப்பாடுகள் மற்றும் கலைப் பண்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்க.

(i) இந்து சமய சிலைகளை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தப்பட்ட **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக.

- கல்லில் பொளியும் முறை அல்லது செதுக்குதல் முறை
- வார்ப்பு முறை, அப்புதல் முறை
- பொள்ளான வார்ப்பு / திண்ம வார்ப்பு (1 புள்ளி)

**(02 புள்ளிகள்)**

(ii) சிவ சோமஸ்கந்த சிலை தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க.

- சோமஸ்கந்த என்பது சிவன், பார்வதி அவர்களின் புதல்வர்களான முருகன், பிள்ளையார் போன்றவற்றை இணைந்ததாக காணப்படும் சிவ மூர்த்தமாகும்.
- பல்லவ சோழ காலங்களில் பிரபல்யமான சிவனின் மூர்த்தமாக கருதப்படுகின்றது.
- இது 12ம் நூற்றாண்டுக்குரியது.
- பொலன்நறுவைக்கால 05ம் சிவதேவாலயத்திற்குரியதாகும்.
- இது முழுமைப்படைப்பு முறையில் வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ளது.
- இச்சிற்பம் கிடையாக தாமரைப்பீடத்தின் மீது அருகருகே சிவன் மற்றும் பார்வதி தேவி காணப்படுகின்றது.
- சிவனின் இடப்பக்கத்தில் அவரின் ஆசீர்வாதம் பெறும் வகையில் பார்வதி உருவம் காணப்படுகின்றது.
- இவ்விரு உருவங்களும் லலிதாசன முறையில் அமர்ந்துள்ளது.
- இதில் முருகன், விநாயகர் வடிவங்கள் காணப்படவில்லை.
- அளவு பரிமாணத்திற்கு ஏற்ப பார்வதி சிலை சிவனை விட சிறிதாக காணப்படுகின்றது.
- சிவனின் முன்புற வலக்கை அபய முத்திரையையும் இடக்கை வரத முத்திரையையும் குறிக்கின்றது.
- அவரது பின்புறம் வலக்கை கோடரியொன்றையும் இடக்கை மானின் உருவத்தை ஏந்தி நிற்கின்றது.
- பார்வதி வலக்கையில் நீல அல்லி மலரை ஏந்தி இருக்கின்றார்.
- இது கொழும்பு நூதன சாலையில் காணப்படுகின்றது.
- சிவன் / பார்வதி [illegible]

**(05 புள்ளிகள்)**

(iii) இந்து சமய சிலைகளுக்கிடையில் நடராஜர் சிலை விசேடமானதாகும். அதன் குறியீட்டு வெளிப்பாடுகள் மற்றும் கலைப் பண்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்க.

**நடராஜர்**

- இது சிவனின் தாண்ட நடனத்தை குறிக்கின்றது.
- இது கி.பி 9 - 12 நூற்றாண்டுக்குரியதாகும். (சோழர் காலம்)
- நடராஜர் சிலை இச்சிலை நான்கு கைகளைக் கொண்டுள்ளது.
- அவை வெவ்வேறு முத்திரைகைகளைக் குறிப்பதோடு வெவ்வேறு விடயங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன.
- மேலுள்ள வலக்கை - உடுக்கு / மேளம் :- படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது.
- கீழ் உள்ள வலக்கை - அபயமுத்திரை :- காத்தல் தொழிலைக் குறிக்கின்றது.
- மேலுள்ள இடக்கை - ஜோதிப் பிளம்பு :- அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது.
- கீழ் உள்ள இடக்கை - கஜகஸ்த முத்திரை :- அருளல் தொழிலைக் குறிக்கின்றது.
- பிரபஞ்சத்தின் படைத்தல், காத்தல், அழித்தல், அருளுல், மறைத்தல் எனப்படும் பஞ்ச கிருத்தியங்களை ஐந்தொழில் தத்துவங்களை இதில் வெளிப்படுத்துகின்றது.
- வலப்பாதத்தினால் முயலகனை மிதித்து நிற்றல் மறைத்தலை அடையாளப்படுத்துகின்றது.



CamScanner
CamScanner

- சுற்றி தீச்சுடராலான வில் வளைவு கொண்ட அமைப்புக்குள் மகர வாய்களினால் இணைக்கப்பட்ட பத்மானத்தின் மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- இது தற்போது கொழும்பு நூதன சாலையில் காணப்படுகின்றது.
- இவ் உருவத்தின் முகத்தில் ஒரு காதில் கடுக்கனும் மறுக்காதில் தோடும் காணப்படுகின்றது. இதன் மூலம் அர்த்த நாதீஸ்வர தன்மை வெளிக்காட்டப்படுகின்றது.
- தலை முடியில் கங்கா நீர் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு பிறையும் (சந்திர) காணப்படுகிறது.

**கலைப்பண்பு**

- தாண்டவ நடனத்தினை வெளிப்படுத்துகின்றது.
- நடன சமநிலை காணப்படுகின்றது.
- வேகமான நடன அசைவு காணப்படுகின்றது.
- சாந்தம் புரிதல் போன்ற உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- முகபாவணை மூலம் அழிப்பையும் கருணையும் வெளிப்படுமாறு காணப்படுகின்றது.
- உலோக வார்ப்பு மூலம் நிரமாணத்திறன் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றது.
- உடலில் பல்வேறு ஆபரணங்கள் மூலம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
  (காதனி, கழுத்தனி, கால்சலங்கை, கழுத்திலுள்ள பாம்பு போன்றன சிறப்பான அலங்கரிப்பாக காணப்படுகிறது.

**(08 புள்ளிகள்)**

4. காந்தார மற்றும் மதுரா குருகுலங்கள் பௌத்தசமய சிற்பங்கள் பலவற்றை உலகுக்கு தோற்றுவித்த கலை மத்திய நிலையங்களாகும்.

(i) காந்தார கலை மரபில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புத்தர் சிலையின் தோற்றுவாய்க்காக காந்தார கலை மரபுகள் உதவியுள்ள விதத்தினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) மதுரா மற்றும் சாரணாத் குருகுலங்களின் நிர்மாணிப்புகள் குப்தர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு மதுரா மற்றும் சாரணாத் புத்தர் சிலைகளின் சிறந்த சிற்ப பண்புகள் மற்றும் உணர்வு வெளிப்பாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் விளக்குக. (08 புள்ளிகள்)

(i) காந்தார கலை மரபில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளைக் குறிப்பிடுக.

ஹோட்மந்தார் புத்தர்சிலை, பிரேகம் புத்தல் சிலை, தக்திபஹீர் புத்தர் சிலை, சஹரிப.ஃ. லொல் புத்தர் சிலை துஷ்கரகிரியாவ (கடினச் செயல்)

**(02 புள்ளிகள்)**

(ii) புத்தர் சிலையின் தோற்றுவாய்க்காக காந்தார கலை மரபுகள் உதவியுள்ள விதத்தினை சுருக்கமாக விளக்குக.

- கி.பி 01-05 ஆம் நூற்றாண்டுக்கிடையில் கிரேக்க செல்வாக்குடன் குசான ஆட்சியாளர்கள் வடமேல் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பகுதிகளை ஆட்சி செய்தனர் இதன் மூலம் காந்தாரக் கலை இந்த பிரதேசம் பூராகவும் பரவி இருந்தது. ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்த புத்த மதத்தை தழுவி அதை அரசமதமாக மாற்றினார்.

- காந்தாரக் பௌத்த கலை ஆட்சியாளருக்கு இடையிலான கிரேக்க உரோமானிய தொடர்புகள் இந்திய பூர்விக கலாசார மற்றும் மகாயான பௌத்தம் ஆகியவற்றால் பாதிப்படைந்தது.

- மஹாயான பௌத்தம் அறிவுபாதையை விட பக்திபாதையை முதன்மைப்படுத்தியதால் சிலை வழிப்பாட்டு தேவை அவசியமானது குசானகாலம் வரை புத்தரின் உருவப்படம் சித்திரங்களில் சித்தரிக்கப்படவில்லை சிலை வழிப்பட்டிற்கு பழக்கப்பட்ட குசான ஆட்சியாளர்கள் மஹாயான பௌத்தம் மற்றும் மேற்கத்தேய உரோமானிய கலைகளில் செல்வாக்கு காரணமாக இந்திய மரபுக்கு மாறாக புத்தரை உருவப்படுத்த ஆசைப்பட்டனர்.



CamScanner
CamScanner

- குசான மன்னர்கள் மேற்கத்தேய நாடுகளின் ஊடான தொடர்புகாரணமாக அந்தப் பகுதிகளில் ஆட்சியாளர்கள் பெற்று இருந்தனர். கனிஷ்கர்களின் ஆட்சிகாலத்தில் புத்தர் உருவம் பொறித்த தங்க நாணயம் வெளியிடப்பட்டது. புத்தர் உருவம் உருவாக்கப்படுவதற்கு ஆரம்பமாக இதை அடையாளம் காணலாம்.

- கிரேக்கர்களை போலவே காந்தார கலைஞர்கள் புத்தர் சிலைகளை உருவாக்க தெய்வீக சிலைகளின் அம்சங்களை பின்பற்றினர்.

- புத்தர்சிலையின் முகம் கிரேக்க கடவுளான அப்பலோவின் முகத்தை ஒத்திருக்கின்றது. இச் சிலையின் அங்கி கிரேக்கம் பிரபுக்கள் மற்றும் உரோமானிய பிரபுக்களின் "டோகா" ஆடையமைப்பு போன்றது.

- உச்சிக் குடும்பி அப்பலோ கடவுளின் சிலையின் மகுடம் போல காணப்படுகிறது. ஆடையின் மடிப்புக்கள் அடர்த்தியாகவும், தடிப்பானதாகவும், நேர்த்தியானதாகவும் காணப்படுகின்றது. அத்தோடு சற்று திறந்த நீண்ட கண்கள் மெல்லிய உதடுகள் மற்றும் நேரான மூக்கு ஆகியவை காந்தார புத்தர் சிலையின் அம்சங்கள் ஆகும். **(05 புள்ளிகள்)**

(iii) மதுரா மற்றும் சாரணாத் குருகுலங்களின் நிர்மாணிப்புகள் குப்தர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு மதுரா மற்றும் சாரணாத் புத்தர் சிலைகளின் சிறந்த சிற்ப பண்புகள் மற்றும் உணர்வு வெளிப்பாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் விளக்குக.

குப்தர் வம்சம் கி.பி 320 இல் மன்னர் சந்திர குப்பதனுடன் தொடங்கியது கி.பி 4-7 நூற்றாண்டுகளில் செழித்து வளர்ந்த கலைப்பாரம்பரியம் குப்தர்கலை என்று அழைக்கப்படுகின்றது. குப்தர்காலத்தில் கலை மற்றும் கலாச்சார மறுமலர்ச்சி பல மத மற்றும் அரசியல் காரணங்களால் உந்தப்பட்டது மேலும் உயர்தரத்துக்குரிய உயர்ந்த பல கலைமையங்கள் இருந்தன.

குப்தர் காலத்தில் புத்தர் சிலைகளை உருவாக்குவதில் முக்கியத்துவம் பெற்ற இரண்டு நகரங்களாக மதுரா மற்றும் சாரநாத் கலைமையங்களால் புத்தர் கலை ஒரு புதிய கலைப்பாரம்பரியம் அல்ல மாறாக மதுராக் கலையின் வளர்ச்சியைக் காட்டும் கட்டமாகும் குப்தர் காலத்தில் உயர்ந்த சிலை படைப்புக்கள் இருவகையாக காணப்படுகின்றது. அவையாவன



PAST PAPERS WIKI

CamScanner
CamScanner

| மதுரா நின்ற நிலை புத்தர்சிலை | சாரநாத் புத்தர்சிலை |
|---|---|
| ➢ செம்மணற்கல் | ➢ சூனார் எனப்படும் கல் வகையொன்றினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| ➢ நின்றநிலையில் காணப்படுகின்றது. | ➢ பத்மாசன முறையில் காணப்படுகின்றது. |
| ➢ அழகான, கவர்ச்சியான கட்டழகான தேக இலட்சணங்களைப் பிரதிபலிக்கின்றன. | ➢ தசைகளின் அமைப்பு தோன்றாத விதத்தில் கட்டழகுடன் எளிமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| ➢ இரு தோள்களும் மூடியிருக்கும் விதத்தில் உடலுடன் ஒட்டிக் காணப்படும்.<br>➢ காவியுடையின் மடிப்புக்கள் சந்தத்துடன் காட்டப்பட்டுள்ளன.<br>➢ நீள்வட்ட வடிவான முகம் மேலாடை ஊடாக இருப்புப்பட்டி ஊடுருவித் தெரியுமாறு காட்டப்பட்டுள்ளது. | ➢ இரு தோள்களும் மூடி உடலுடன் ஒட்டியிருக்கும் விதத்தில் மடிப்பின்றிய காவியுடையாக காண்பிக்கப்பட்டுள்ளது.<br>உணர்வு வெளிப்பாடு தொடர்புகளுக்கு 1 புள்ளி. |
| ➢ இடக்கை கீழே தொங்கவிடப்பட்டுள்ளது வலக்கை முன்னோக்கி முழங்கை வரை மடிக்கப்பட்டுள்ளது | ➢ கரங்கள் தர்ம சக்கர முத்திரையை பிடித்துக்கொண்டிருக்கின்றது. மான்கள் பூங்காவில் (இசிபத்தனக மிகதாயில்) புத்தர் துறவிகள் ஐவருக்கு அவரது முதல் தர்ம போதனையை போதிக்கும் நிலையைக் குறிக்கின்றது, என நம்பப்படுகின்றது. |
| ➢ தாமரை இதழ்கள் கொடிவலை (லியவெல) ஆகியவை கொண்ட மிகவும் அழகிய நுட்பமான செதுக்கல் வேலைப்பாடுளைக் கொண்டதாக ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. | ➢ அழகிய நுட்பமான செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டதாக ஒளிவட்டம் காணப்படுகின்றது. இருபுறத்தில் தெய்வ உருவங்கள் இரண்டும், சிலையின் கீழ்பகுதிப் பின்னணியில் அழகிய செதுக்கல் ஒன்றும் காணப்படுகின்றது.<br>➢ அமர்ந்திருக்கும் ஆசனத்தின் நடுப்பகுதியில் தர்மசக்கரம் உள்ளது.<br>➢ இருபுறமும் வணங்குகின்ற நிலையில் துறவிகளின் உருவங்கள் உள்ளன.<br>➢ மான்களின் தோட்டம் என்பதைக் காட்ட இரு மான்கள் இடப்பட்டுள்ளது. |
| **பாவ வெளிப்பாடு** | **பாவ வெளிப்பாடு** |
| ➢ அரைவாசி திறந்த கண்கள், புன்சிரிப்பு, நீண்ட காதுகள் எனும் பண்புகளைக் கொண்டிருப்பதால் புத்தரின் ஆன்மீகப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | ➢ வில்வடிவைக் கொண்ட இரு விழிகள், வானவில்வளைவான புருவங்கள், தடித்த உதடுகள், நீண்ட செவிகள், நீள் வட்டவடிவமுடைய முகம், எடுப்பான இளமைத் தோற்றம் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளது. புத்தரின் சாந்தம், கருணை , ஆளுமை எனும் இயல்புகளைக் கொண்டுள்ளது. |

- உணர்வு வெளிப்பாடு -1 புள்ளி வழங்கு.

**(08 புள்ளிகள்)**



CamScanner
CamScanner

5. சிந்துவெளி நாகரிகம் மிக முன்னேற்றமடைந்த மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்த புராதன குடியிருப்பாகும்.

(i) சிந்துவெளி மக்கள் கலைப் படைப்புக்களை நிர்மாணித்தபோது பயன்படுத்திய **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிந்துவெளி மக்கள் மனித உருவங்களை நுட்பமாக ஆராய்ந்து நிர்மாணிப்பதில் வல்லவராவர். **ஓர்** உதாரணம் மூலம் சுருக்கமாக இதனை அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) சிந்துவெளி நாகரிகத்தில் மிக முன்னேற்றமடைந்த கட்டடக்கலை நிர்மாணத் தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கூற்றை அவர்களின் கட்டடக்கலை நிர்மாணங்களை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

(i) சிந்துவெளி மக்கள் கலைப் படைப்புக்களை நிர்மாணித்தபோது பயன்படுத்திய **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக.

வார்த்தல் முறை, செதுக்கல் முறை, அப்புதல் முறை **(02 புள்ளிகள்)**

(ii) சிந்துவெளி மக்கள் மனித உருவங்களை நுட்பமாக ஆராய்ந்து நிர்மாணிப்பதில் வல்லவராவர். **ஓர்** உதாரணம் மூலம் சுருக்கமாக இதனை அறிமுகம் செய்க.

- சிந்து வெளி நாகரிகத்தில் பல்வேறு மனிதவர்க்கங்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றது.
- பல்வேறு ஊடகங்களை பயன்படுத்தி சிந்து வெளிமக்கள் தமது கலை நிர்மாணங்களை உருவாக்கியுள்ளனர்.
- சிந்துவெளியில் காணப்படும் நிர்மானங்கள் சிவப்பு மணற்கல், சாம்பல், மணற்கல், வெள்ளை மணற்கல், சுண்ணாம்புக்கல் உலோகம் (வெண்கலம்) ஆகியவற்றில் ஆக்கப்பட்டவையாக காணப்படுகினறது.
- மனித உருவங்களை நிர்மாணிக்கும் போது கையாண்ட பொது பண்புகள்.
  - ➢ மனித உருவங்களை அமைக்கும் போது கிரேக்க உரோமானிய சிற்பங்களில் காணப்படும் இயற்கையான அழகிய பண்பு கையாளப்பட்டுள்ளன.
  - ➢ வெவ்வேறு ஊடகங்களிலும் மனித உடல் அமைப்பை சிறப்பாக வெளிப்படுத்தி காட்டியுள்ளானர்.
  - ➢ மனித உடலின் அங்கவயம், மற்றும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளன.
  - ➢ மனித மெய்நிலை சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.
  - ➢ மனித உருவங்களின் கருப்பொருளுக்கு ஏற்ப பாவ வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (சாந்தமான, அமைதியான, மகிழ்ச்சியான)
  - ➢ ஆடை ஆபரணங்கள் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட விடயங்களை சிந்து வெளியில் கண்டு எடுக்கப்பட்ட ஆக்கத்தைக் கொண்டு அறிமுகம் செய்தல் வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

(iii) சிந்துவெளி நாகரிகத்தில் மிக முன்னேற்றமடைந்த கட்டடக்கலை நிர்மாணத் தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கூற்றை அவர்களின் கட்டடக்கலை நிர்மாணங்களை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக.

சிந்து வெளி நாகரிகத்தின் கால எல்லை கி.மு 2150-1750 இற்குரியதென முறையான ரேடியம் காபன் கால நிர்ணயிங்களின் படி கருதப்படுகின்றது.

**நகர திட்டமைப்பு**

மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நிர்வாக மத்திய நிலையம் மற்றும் குடியேற்றங்களாகவும். கைத்தொழில் நகரமாகவும் லோத்தல் வணிக நகரமாகவும் இனங்காணப்பட்டுள்ளன.



CamScanner
CamScanner

**வீடு அமைப்புக்கள்**

- மொகஞ்சதாரோவில் உட்புற நகரத்தினுள் ஆட்சியின் முக்கிய பொதுக்கட்டங்கள் மற்றும் பிரபுக்களின் வீடுகள் அமைந்திருந்தன வெளிப்புற நகரத்தில் பொது மக்களின் வீடுகள் இருந்துள்ளன.
- பிரபுக்கள் இல்லங்கள் ஆடம்பரமாக காணப்பட்டது. பொது மக்களின் வீடுகளைவிடப் பெரியதாகவும் பொதுமக்களின் வீடுகளுக்கு அப்பாலும் இவை அமைந்திருந்தன அவர்களின் வீடுகளினுள் குளியலறை மலசலக் கூடம் போன்றவை இருந்துள்ளதோடு மாடிவீடுகள் இருந்தமைக்கும் அத்தாட்சிகள் உள்ளன.
- பொது மக்களின் வீடுகள் ஒரே அமைப்பைக் கொண்ட கட்டங்களாகும்.
- ஒரே வடிவத்துக்கமைய கட்டப்பட்ட வீட்டுத் தொடர்களில் இருந்துள்ளதுடன் இவை வீதியின் இருபக்கங்களிலும் அமைந்து இருந்தன.
- ஒரு வீட்டுத் தொடரில் 10 முதல் 12 வீடுகள் அமைந்திருந்தன ஒவ்வொரு வீட்டிலும் விறாந்தை ஓர் அறை மற்றும் சமயலறை ஆகியன இருந்துள்ளன.

**சுகாதாரம்** ½ புள்ளி

- வீடுகளின் நுழைவாயில் பிரதான வீதியை நோக்கி இருக்க வில்லை அவை உட்புறமாக அமைந்து இருந்தது.
- ஒரு வீட்டுத் தொடருக்கு பொது மலசலகூடமும் பொதுகிணறும் இருந்துள்ளன.
- உள்ளகச் சுவர்கள் களிமண் கலவையினால் பூசப்பட்டுள்ளதோடு மிகவும் எளிமையாகவும் இருந்துள்ளன.

**வேறு கட்டங்கள்**

- உட்புற நகர மத்தியிலுள்ள நீர்த்தடாகம் 39 அடி நீளமாகவும் 03 அடி அகலமாகவும் 8அடி ஆழமாகவும் இருந்துள்ளது. இதைச் சுற்றி மூன்று பக்கத்தில் அறைத் தொடர் இருந்துள்ளதோடு சமய அனுஷ்டானங்கள் நடத்தும்போது மதகுருமாரின் பாவனைக்காக இவை பாவிக்கப்பட்டு இருக்கலாமென கருதப்படுகின்றது.
- தானியங்களைக் களஞ்சியப்படுத்தப் பாரிய கட்டிடமொன்று இருந்துள்ளதோடு அது நிர்வாகத்துக்கு அருகில் நில மட்டத்தை விட உயர்ந்த மேடையின் மேல் அமைக்கப்பட்டு இருந்தது.

**நீர்ப்பாசனம்** ½ புள்ளி

- மேட்டு நிலமொன்றிலிருந்து செவ்வக வடிவான கிணற்றிலிருந்து அக்விடக்ட் என்னும் நீர்பாசன முறையினூடாக த் தடாகத்திற்கு நீர் பெறப்பட்டுள்ளது. சுரங்க வடிவிலான இந்த நீர்பாசன கட்டமைப்பில் நீர் வெளியேற்றும் விசேட வில்வடிவிலான மதகு போன்ற கட்டிடக்கலை அமைப்பொன்று காணப்படுகின்றது. **(08 புள்ளிகள்)**



CamScanner
CamScanner

## பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

6. ஐரோப்பாவில் அருகருகே அமைந்திருந்த இரண்டு இராச்சியங்களான கிரேக்கம் மற்றும் உரோமம் ஆகியன கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய நாடுகளாகும்.

(i) கிரேக்க தொன்மைக்கால சிற்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உரோம கட்டடக் கலையின் சிறந்த நிர்மாணமான ரொஜன் தூண் (The Trajan Column) தொடர்பாக சுருக்கமான கலைத்துவ மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) கிரேக்க மற்றும் உரோம கலைஞர்கள் மனித உருவங்களை, ஓவியங்களுக்காக பயன்படுத்திய விதம் மற்றும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியாக மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

(i) கிரேக்க தொன்மைக்கால சிற்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

- கூரோஸ் (Kowros) கூரே (Kore)
- பெயர் இடப்படாத அப்பலோ
- கன்று குட்டி வைத்திருப்பவரின் சிற்பம்.

**(02 புள்ளிகள்)**

(ii) உரோம கட்டடக் கலையின் சிறந்த நிர்மாணமான ரொஜன் தூண் தொடர்பாக சுருக்கமான கலைத்துவ மதிப்பீடு செய்க.

- உரோமர்களின் போர் வெற்றியின் (டெசியன் (Decion) போர் வெற்றியின்) ஞாபகார்த்தமாக இது அமைக்கப்பட்டது.
- இத்தூண்கள் கி.பி 107-113 காலப்பகுதியில் கட்டப்பட்டதாக கருதப்படுகின்றது.
- இத்தூணின் அடிப்பகுதியில் டிரஜன் மற்றும் அவனது அரசியான ப்ளொட்டினா இனது கல்லறையில் பிரவேசிக்கும் வாயிலில் அமைந்துள்ளது.
- தூணின் உடற்பகுதி ஏறத்தாழ 98 அடி உயரமானது. பாதம் பகுதியுடன் மொத்த உயரம் ஏறதாழ 120–150 அடி ஆகும்.
- இத்தூண் விட்டம் 12.2 அடி ஆகும்.
- உடற் பகுதியை அமைப்பதற்கான உருளை வடிவான 20 சலவைக் குற்றிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு குற்றியும் ஏறத்தாழ 323 தொன்நிறையுடையது.
- டொரிக் தூண்களின் தன்மையுடையதாக அமைக்கப்பட்டுள்ள இத்தூண் 3.6 அடி அகலமும் ஏறத்தாழ 800 அடி நீளமும் கொண்ட சுருள்வடிவான ஒரு சுற்றுப்பட்டியினால் சூழப்பட்டுள்ளது.
- இதில் 24 சுற்றுக்கள் காணப்படுவதோடு அவற்றில் (ட்ரஜனட) வீரனின் தகவல்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்கு ஏறத்தாழ 2500 மனித உருவங்கள் உள்ளன.
- பேரரசரின் யுத்தக்காட்சிகள், யுத்தப் பெறுபேறுகள் கோட்டைகள், யுத்தப் பயனங்கள், உலாக்கள், தூதுவர்கள், கைதிகள் போன்ற பல்வேறு அம்சங்கள் இங்கு பொருளாக அமைந்துள்ளன.
- இத்தூணின் தனிச்சிறப்பாக அமைவது அதன் உடற்பகுதியைச் தழ 656 அடி நீளத்திற்கு நீண்டு செல்லுமாறு தொடர்ச்சியாக கதை கூறும் வகையில் அரை புடைப்பு சிற்பமாகும்.
- தூணின் உடற்பகுதி உருளை வடிவமானது இது கீழ் இருந்து மேல் நோக்கி செல்லும் போது சிறித்து செல்கின்றது.
- தூணின் உடற்பகுதியில் மேலே ஏறிச் செல்ல உதவும் சுருள் வடிவான படிவரிசை காணப்படுகின்றது இத் தூணின் மேற்பகுதியில் ரொஜன் பேரரசின் சிலை காணப்படுகின்றது.
- இது டமஸ்கல் நகரத்தை சேர்ந்த அப்பலோடோரஸ் என்ற கலைஞரால் ஆக்கப்பட்டது.

**(05 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI



Past Papers Wiki
CamScanner
CamScanner

(iii) கிரேக்க மற்றும் உரோம கலைஞர்கள் மனித உருவங்களை, ஓவியங்களுக்காக பயன்படுத்திய விதம் மற்றும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியாக மதிப்பீடு செய்க.

- கிரேக்க மற்றும் உரோம ஓவியங்கள் மனித உருவங்களை அடிப்படையாகக் கொண்டதாயினும் அவற்றை பயன்படுத்திய முறை மிகச் சிறப்பானதாகும்.
- கிரேக்கர்கள் தமது ஓவியங்களை மட்பாண்டங்களில் வரைந்துள்ளார்கள் உரோமர்கள் தமது ஓவியங்களை பலகை மற்றும் சுவர்களில் வரைந்தார்கள்.
- கிரேக்க மட்பாண்ட ஓவியங்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் தெய்வ வடிவங்கள் மற்றும் கிரேக்க புராண உருவங்களை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது.
- உரோமர்களின் ஓவியங்களின் விடயப்பொருளாக பிரதிமை உருவங்கள் மற்றும் உரோமர்களின் அரச வாழ்க்கையோடு தொடர்புபட்ட விடயங்கள் உள்ளடக்கி இருந்தது.
- கிரேக்க ஓவியங்களைக் காட்டிலும் உரோம ஓவியங்கள் மனித உருவங்களை நிர்வாணமாக சித்தரிப்பது குறைவாக காணப்பட்டது.
- கிரேக்க ஓவியங்கள் மனித உருவங்களை வரையும் போது இலட்சியமான உருவங்களை வரைந்ததோடு உரோம ஓவிய மனித உருவங்கள் யதார்த்தப் பூர்வமாக அமைந்து இருந்தது.

| | கிரேக்கம் | உரோமம் |
|---|---|---|
| ஓவியங்கள் வரையப்பட்ட சந்தரப்பம் | மட்பாண்டங்கள்<br>1.கறுப்பு நிற மட்பாண்டம்<br>2. செந்நிற மட்பாண்டம்<br>➢ கட்டிட சுவர்கள்<br>➢ மரத்தினால் ஆன சட்டகம் | ➢ மம்மி பூத உடல்களை மறைப்பதற்கான சட்டகம்<br>➢ ஸ்கொட்லாந்து அரச அரும்பொருட்காட்சி சாலையில் காணப்படும் பெண்ணின் உடலின் மேற்பகுதியை காட்டும் ஓவியம்<br>➢ சுவர்களில் வரையபப்ட்டுள்ள ஓவியங்கள் விலா மிஸ்டரிஸ் கட்டடத்தில் காணப்படுகின்றது. |
| தலைப்பு | ஐதீகக்கதைகள், வீரகாவியங்கள், தெய்வங்கள், பண்டைய பெருமை மிக்க வீரர்களின் கதைகள், யுத்தக்காட்சிகள், விளையாட்டுக் காட்சிகள், பாணம் பருகும் காட்சிகள் | அரசர்களின் வெற்றிக் கதைகள், பிரதிமை உருக்கள், ஐதீகக் கதைகள், சமயநிகழ்வுகள் |
| மனித உருவங்களை வரைந்த முறைகள் | இருபரிமான முறைகள், நேர்கோட்டு இயல்புகள் (Linearity) கொண்டது. | முப்பரிமாணம் ஒளிநிழல் மற்றும் ஆழம் காட்டுதல் தூரநோக்கு போன்ற கோட்பாடுகள் பேனப்பட்டுள்ளன. மனித உருவங்கள் இயற்கைபாங்கானதாக காணப்படுவதோடு உணர்வு வெளிப்படுவதாக காணப்படுகின்றது. |
| தளப்பயன்பாடு | பயன்பாட்டுக்குரிய மட்பாண்டங்களை சுற்றி ஓவியங்கள் காணப்படுகின்றது. | கட்டிடத்தின் சுவர்களின் மேற்பரப்பில் வரையப்பட்டுள்ளது. |
| வர்ணப்பிரயோகம் | சிவப்பு, கறுப்பு பயன்பாடு | பிரகாசமான வர்ணப் பயன்பாடு |



CamScanner
CamScanner

| | | |
|---|---|---|
| இரேகை பயன்பாடு | உருவங்களைச் சுற்றி புறக்கோடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது | ஆடைகள் வரையப்பட்டுள்ளதில் நேர்த்தியான கோடுகள் காணப்படுகின்றன. |

**(08 புள்ளிகள்)**

7. இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சிக் காலம் உன்னத கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய காலகட்டமாகும்.

(i) மைக்கல் ஆஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சிக் கலையின் பொதுப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) லியானோ டாவின்சியின் 'பாறையின் மீது கன்னி மரியாள்' மற்றும் ரபாயெல் சன்சியோவின் 'அல்பா மடோனா' ஆகிய ஓவியங்கள் தொடர்பாக அவற்றின் மாதிரி மற்றும் கலைப் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒப்பீட்டுரீதியான பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

(i) மைக்கல் ஆஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக.

- ➢ புனித பீற்றரை சிலுவையில் அறைதல்
- ➢ இறுதித்தீர்ப்பு
- ➢ பரிசுத்தகுடும்பம்
- ➢ சிஸ்ரையின் தேவாலய விதானத்து ஓவியங்கள்
  - ஆதாமைப் படைத்தல்
  - ஏவாளைப் படைத்தல்
  - சூரிய சந்திரர்களின் படைப்பு
  - நீரில் இருந்து நிலத்தை வேறாக்குதல்
  - நோவின் மயக்கம்
  - மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு
  - நோவாவை துரத்துதல்

**(02 புள்ளிகள்)**

(ii) மறுமலர்ச்சிக் கலையின் பொதுப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க.

- மனித தலைப்பேறு (Humanism) தனிமனிதவாதப் (Individualism) பண்புகளை வெளிப்படுத்துதல்.
- பழமை வாய்ந்த கிரேக்க, உரோம நியதிகளை மீண்டும் உபயோகித்தல்.
- நிலவுருவக் காட்சி கலையின் வளர்ச்சி
- கண்ணுக்குப் புலப்படும் பொருள் அதே விதத்தில் அதாவது இயற்கையாகப் புலப்படுத்துதல் இதன் விளைவாக தூரநோக்கு எனும் கோட்பாடு வளர்சியடைந்தது.
- உடற்கட்டமைப்பு (Anatomy) அளவுபரிமானங்களும் (Propotitions) வெளிப்படுத்தப்பட்டுள்ளமை.
- கிரேக்க உரோம கருப்பொருட்கள் மீண்டும் பிரபல்யம் அடைந்தது.
- பிரதிமை ஓவியக்கலை வளர்ச்சியடைந்தது.

**(05 புள்ளிகள்)**



CamScanner

Past Papers Wiki

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iii) லியானோ டாவின்சியின் 'பாறையின் மீது கன்னி மரியாள்' மற்றும் ரபாயெல் சன்சியோவின் 'அல்பா மடோனா' ஆகிய ஓவியங்கள் தொடர்பாக அவற்றின் மாதிரி மற்றும் கலைப் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒப்பீட்டுரீதியான பகுப்பாய்வு செய்க.

| பாறைமேல் கன்னி | அல்பாடோனா |
|---|---|
| **மாதிரி** | **மாதிரி** |
| கி.பி 1468 காலத்தை சேர்ந்த இப் படைப்பு பிரான்ஸ்லூவர் காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது<br><br>உயர் மறுமலரச்சி காலத்திற்கு உரியதாகும்.<br><br>மென்மையும் இயற்கையும் இனைந்தாக காணப்படுகின்றது.<br><br>இவ் ஓவியத்தின் மத்தியில் கன்னிமாரியாளும் அவரது வலது புறத்தே குழந்தை யேசுவும் இடது புறத்தே யுவானுடன் தேவ தூதுவக் கன்னியும் வடிவமாக காணப்படுகின்றனர்.<br><br>கன்னிமரியாளின் கர்ப்பமும் குழந்தையேசுவின் வளர்ப்பும் தந்தை இல்லாமல் நடந்தது என்பது மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது. | கி.பி 1570-1511 காலத்தை சேர்ந்தது.<br><br>உயர் மறுமலர்ச்சி காலத்திற்கு உரியதாகும்.<br><br>ஆடம்பரமற்ற அழகான தன்மை வெளிப்படுத்துகின்றது.<br><br>அன்னைமரியாள் குழந்தை புனித யுவான் ஆகிய மூன்று பாத்திரங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.<br><br>இதுவட்டவடிவான தளத்தில் ஒழுங்கமைப்பட்டுள்ளது.<br><br>இவ் ஓவியம் ஆரம்பத்தில் பலகையில் வரையப்பட்டு பின்னர் கன்வஸ் துணியில் வரையப்பட்டுள்ளது. |
| **கலைபண்புகள்** | **கலைபண்புகள்** |
| இது கியரொஸ்கியுரோ வர்ணம் தீட்டும் முறை நன்கு வெளிக்காட்டப்படும் ஓர் ஓவியமாகும்.<br><br>இது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.<br><br>பின்னியானது மர்மமயமான அடிவானத்தை கொண்ட ஓர் உலகு காட்டப்பட்டுள்ளது.<br><br>தாய்மை கருனை போன்ற பாவவெளிப்பாடு நிலைமைகளை முனைப்பாக காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய இப்படைப்பில் கருனை உணர்வு குழந்தையின் மென்மை இயல்பும் வெளிக்காட்டப்பட்டுள்ளது | இது கியரொஸ்கியுரோ வர்ணம் தீட்டல் முறை நன்கு வெளிக்காட்டப்படும் ஓர் ஓவியமாகும்<br><br>இது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.<br><br>இவ் ஓவியத்தில் கன்னிமரியாளின் தாய்மை உணர்வும் குழந்தையின் மென்மைத் தன்மையும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.<br><br>இதில் காணப்படும் உருவங்கள் தெய்வீக அம்சங்கள் (ஒளிவட்டம் ஒளிக் கற்றை) இல்லாமல் நிஜ உலகின் மனிதப்பாங்கில் காட்டப்பட்டுள்ளது. |

(08 புள்ளிகள்)



PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
CamScanner
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library
CamScanner